# பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரின் ஈடுபாடு

**படைப்பாளர்கள்:**
திருமதி உஷா ஜனார்த்
திருவாட்டி தாஜுனீசா
திருவாட்டி ரேகா செரீன்


# பகிர்வின் உள்ளடக்கம்

- பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரின் ஈடுபாடு

- கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகளில் பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரின் ஈடுபாடு

- இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் தளத்திலுள்ள வளங்கள்

# கல்வியாளர்களின் கருத்து





பெற்றோரின் ஈடுபாடு பிள்ளைகளின் கற்றலுக்குப் பலவகையில் வலுச் சேர்க்கிறது.

# கல்வியாளர் குராஸ்னோவின் கூற்று (2010)

- பெற்றோரின் ஈடுபாடு பிள்ளைகளின் கற்றலையும் சாதனைகளையும் மேம்படுத்தும் என்பதற்குரிய சான்றுகள் நிறைய இருக்கின்றன.



# ஒரு குழந்தையைப் பேணி வளர்க்க...



# பள்ளி, குடும்பம், சமூகம் ஆகிய முத்தரப்பின் கூட்டு முயற்சி



# ஆசிரியர் செய்ய வேண்டியவை

- பெற்றோரின் உதவியையும் ஈடுபாட்டையும் வரவேற்றல்
- பெற்றோருடன் வலுவான நல்லுறவை வளர்த்துப் பிள்ளைகளின் முழுமையான கல்விக்கு இட்டுச் செல்ல உதவுதல்




# ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவதால் ஏற்படும் நன்மைகள்

- பிள்ளைகளின் பின்புலத்தை ஆசிரியர்கள் அறிந்துகொள்ளலாம்.
- வகுப்பறைக் கற்பித்தலில் பெற்றோரை ஈடுபடுத்துவதால் பிள்ளைகள் மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் கற்பார்கள்.
- பெற்றோர் பிள்ளைகளின் வளர்ச்சிநிலையை அறிந்துகொள்ளவதற்கும் இது துணைபுரியும்.

# பிள்ளைகளின் பின்புலம்

இவற்றைப் பெற்றோரிடமிருந்து கேட்டறிய வேண்டும்.



# பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரை ஈடுபடுத்துதல்

- பெற்றோர் ஆசிரியர்களுடன் ஒன்றிணைந்து கற்றல் பயணங்கள் மேற்கொள்ளுதல்.

- பெற்றோரின் திறன்களையும் நிபுணத்துவத்தையும் அறிந்துகொள்வதன்வழி அவர்களைப் பாட நடவடிக்கைகளின்போது ஈடுபடுத்துதல்




# பெற்றோரைச் சந்தித்தல்

பெற்றோரைச் சந்திக்கும்போது கருத்துத்தெரிவிப்பு, கலந்துரையாடல் முதலியவைச் செம்மையாகவும் ஆக்கப்பூர்வமாகவும் நடைபெறுவது முக்கியாமாகும்.

பின்வருவனவற்றில் பிள்ளைகளின் வளர்ச்சிநிலையைப்பற்றிக் கருத்துத் தெரிவித்துக் கலந்துரையாட வேண்டும்.



**அறிவாற்றல்**



**திறன்கள்**



**பண்புகள்**

# பெற்றோருடன் பல்வேறு வகையில் தகவல் பரிமாற்றம் செய்தல்

- வகுப்பறையில் பிள்ளைகளின் படைப்புகளைக் காட்சிக்கு வைத்தல்
- பிள்ளைகள் ஆர்வம் காட்டுபவற்றைப்பற்றிப் பெற்றோருக்குத் தெரிவித்தல்
- வகுப்பறை அறிவிப்புப் பலகையில் பிள்ளைகளின் படைப்புகளை ஒட்டி வைத்தல்
- பிள்ளைகள் வகுப்பறையில் நடவடிக்கையைச் செய்யும் புகைப்படத்தை வீட்டுக்குக் கொடுத்தனுப்புதல்
- பிள்ளைகளுக்குப் பிடித்த கதைப்புத்தகத்தை வீட்டுக்குக் கொடுத்தனுப்புதல்
- பெற்றோரும் பிள்ளைகளும் வீட்டில் சேர்ந்து செய்வதற்கான நடவடிக்கைகளைக் கொடுத்தல்
- வகுப்பறை, பள்ளி ஆகியவற்றின் நடவடிக்கைகளைப்பற்றிய சிற்றறிக்கைகளைக் கொடுத்தனுப்புதல்

# ஆசிரியரும் பெற்றோரும் அணுக்கமாகச் செயற்படும்போது பிள்ளைகள்...

- தாங்கள் பாதுகாப்பான சூழலில் இருக்கிறோம் என்பதை உணர்வர்.
- கொடுக்கப்படும் கற்றல் வாய்ப்புகளால் மேலும் பயனடைவர்.
- கற்றலை இன்பமான அனுபவமாகக் கொள்வர்.
- பள்ளியும் வீடும் ஒன்றோடொன்று தொடர்புடையது என்பதை உணர்வர்.

# கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகளில் பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரின் ஈடுபாடு

திருவாட்டி ரேகா செரீன்

# நோக்கங்கள்

❖பெற்றோர்கள் பாடல்களின்வழிப் பிள்ளைகளின் ஆர்வத்தையும், உற்சாகத்தையும் தூண்டுதல்

❖பெற்றோர்கள் கதைகளின்வழிப் பிள்ளைகளின் மொழிக் கற்றலில் பங்கேற்பையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்துதல்

❖பெற்றோர்கள் அர்த்தமுள்ள விளையாட்டின்வழிப் பிள்ளைகளை உற்சாகமான கற்றலில் ஈடுபடுத்துதல்

❖பெற்றோர்கள் பிள்ளைகளுக்குத் தமிழில் கருத்துப்பரிமாற்றம் செய்வதற்கேற்ற வீட்டுச் சூழலை உருவாக்குதல்

# கதை சொல்லும் நடவடிக்கையில் பெற்றோர்களை ஈடுபடுத்துதல்

❖ **கதைப்புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வகுப்பில் கதை சொல்லுவதை ஊக்குவித்தல்**

**பயன்கள்**

- பிள்ளைகளைப்பற்றியப் புரிந்துணர்வு
- எளிமையாகவும், இனிமையாகவும் கலந்துரையாடுவதைப்பற்றிய விழிப்புணர்வு
- வளங்களை உருவாக்குவதும், அதைப் பயன்படுத்தும்போது ஏற்படும் கற்றல் சூழலைப்பற்றியும் கற்றுக்கொள்வது
- நூலகத்திற்குச் செல்லும் பழக்கத்தைக் கடைபிடிக்கப் பழகுவது

# அதிசய வாரத் திட்டப்பணியில் ஈடுபடுத்துதல்

- **ஒவ்வொரு தவணையிலும் இரண்டு வாரங்களுக்கு நடைபெறும் நடவடிக்கைகளில் பெற்றோர்களை ஈடுபடுத்துதல்**

**பயன்கள்**

- திறமைகளைப் பகிர்ந்துகொள்ளுதல்
- தமிழில் பேசவேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு செயல்படுதல்
- பண்பாடு, விழுமியங்கள், அறநெறிப் பண்புகளை எளிமையாகக் கற்றுக்கொடுப்பதன் அவசியத்தைக் கற்றுக்கொள்ளுதல்

# கல்விச் சுற்றுலாவில் கலந்துகொள்ளச் செய்தல்

❖ **வகுப்பிற்கு அப்பாற்பட்ட கற்றல் சூழலில் பெற்றோர்களுக்கு வாய்ப்பளித்தல்**

**பயன்கள்**

➢ பெற்றோர்கள் தங்கள் பிள்ளையுடன் தமிழில் உரையாடுதல்

➢ புதிய சொற்களை எளிதில் மகிழ்வுடன் கற்றுக்கொள்ளுதல்

➢ பிள்ளைகளிடம் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளச் செய்தல்

# குடும்ப உறுப்பினருடன் சேர்ந்து செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுத்துதல்

❖ **பள்ளியில் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை கொடுக்கும் நடவடிக்கைத் தாளைப் பிள்ளைகளுடன் சேர்ந்து செய்ய ஊக்கப்படுத்துதல்**

**பயன்கள்**

➢ பெற்றோர் - பிள்ளை பிணைப்பு ஏற்படுவதை உணர்தல்

➢ பிள்ளையுடன் நேரத்தைச் செலவிடுவதன் அவசியத்தைப் புரிந்துகொள்ளுதல்

➢ பிள்ளைகளின் ஆர்வத்தையும், திறமைகளையும் அறிந்து செயல்படுதல்

# பயிலரங்குகளில் கலந்துகொள்ள ஊக்கப்படுத்துதல்

- ❖ **பாடத்திட்டத்தைப்பற்றிய விளக்கம், வளங்களை உருவாக்குதல், மொழி விளையாட்டுகள், கலந்துரையாடுதல் ஆகியவற்றைப்பற்றித் தெரிந்துகொள்ள ஊக்குவித்தல்**

**பயன்கள்**

- ➢ அடிப்படைத் திறன்களைக் கற்றுக்கொள்வதுபற்றித் தெரிந்துகொள்ளுதல்
- ➢ கதை சொல்லும் ஊத்திமுறையைக் கற்றுக்கொள்ளுதல் (கேள்வி கேட்டல், பாவனை நடிப்பு, சிந்தி-இணை-பகிர்...)
- ➢ மறுபயனீட்டுப் பொருள்களைக்கொண்டு வளங்களை உருவாக்குவதும், கலந்துரையாடுவதைப்பற்றியும் தெரிந்துகொள்ளுதல்
- ➢ விளையாட்டுகளின்வழித் தமிழ்மொழியை மகிழ்வூட்டும் வகையில் கற்றுக்கொடுப்பதைப்பற்றிப் புரிந்துகொள்ளுதல்

# கதைப்புத்தகங்களை வாசிக்க உற்சாகப்படுத்துதல்

- **பயிலரங்குகளில் கற்றவற்றை வீட்டில் பயன்படுத்துவதற்காக இரண்டு வாரத்திற்கு ஒருமுறை கதைப்புத்தகங்களைக் கொடுத்தல்**

**பயன்கள்**

- பிள்ளைகளிடம் கதையை ஊகிக்கச் சொல்லுதல்
- பட அட்டையைப் பார்த்துக் கலந்துரையாடுதல்
- கேள்விகள் கேட்டல்
- உணர்ச்சியுடன் வாசித்தல்
- புதிய சொற்களை விளக்குதல்
- அசைவுகளைச் செய்யச் சொல்லுதல்
- தங்கள் அனுபவத்தோடு தொடர்புபடுத்துதல்
- தங்களுக்குப் பிடித்த பகுதி, கதாபாத்திரம் போன்றவற்றைப்பற்றிப் பேசுதல்




# இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் தளத்திலுள்ள வளங்கள்

திருவாட்டி தாஜுனீசா

கல்வி அமைச்சு உருவாக்கிய பெரிய புத்தகங்களுக்கான நடவடிக்கைகள், **இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் தளத்தில்** உள்ளன.



# இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் தளத்திலுள்ள வளங்கள்


- இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டம்
- இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய கல்வியாளர்க்குரிய வழிகாட்டி
- I Teach பணிச்சட்டத்தின் கோட்பாடுகள் (ஒளிக்காட்சி)
- பெரிய புத்தகங்களுக்கான நடவடிக்கைகள்
- கற்றல் நோக்கங்களை விளக்கும் ஒளிக்காட்சிகள்

Teachers as facilitators of learning

ஆசிரியர்கள் நெறியாளராக இருந்து கற்றலை வழிநடத்துதல்

Integrated Approach to learning)

ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறைகள் வாயிலாகக் கற்றல்




Engaging children through purposeful play

அர்த்தமுள்ள விளையாட்டுவழிப் பிள்ளைகளைக் கற்றலில் ஈடுபடுத்துதல்

முழுமையான வளர்ச்சி

Holistic Development

பிள்ளைகள் தாமாகவே தம் அறிவாற்றலை உருவாக்குதல்

Children as constructors of learning

தரமான இருவழிக் கருத்துப்பரிமாற்றம் வாயிலாக நம்பகமான கற்றல் நிகழுதல்

Authentic learning through quality interactions

# மேலும், இத்தளத்தின்வழி பாலர் பள்ளி ஆசிரியர்கள்..



- பாலர் கல்விசார்ந்த பலவற்றைக் கற்றுக்கொள்ளலாம்.
- வகுப்பில் நடத்திப் பார்த்துப் பயனடைந்த நடவடிக்கைகளைப் பகிர்ந்துகொள்ளலாம்.

இப்போது இந்தத் தளத்திலுள்ள
வளங்களைப்
பார்ப்போம்!








https://www.moe.gov.sg/education/preschool

# நன்றி